I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.2
M.C.O.P.NO.221/2023

| | | |
|---|---|---|
| Name | : | P. Ramakrishnan |
| Husband Name | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 10/02/2025

முதல் விசாரணை

2, 4 வது எதிரிமனுதாரர் தரப்பில் சாட்சி சாட்சியம் அளிப்பதற்கு தகுதியில்லை என்று ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. அதில் மனுதாரர் தரப்பில் ஏற்கனவே ம.த.சா.ஆ.10 ன் படி சக்திபெரோ அலாய்ஸ் இந்தியா பிரைவேட் லிமிட், என்ற கம்பெனியுடன் பழைய கம்பெனியான EMJAY STEEL UDYYOG Pvt. Ltd. என்ற கம்பெனி இணைந்துவிட்டது என்று தெரிவிக்கப்பட்டது. எனவே தற்போதைய கம்பெனியில் இருந்து சாட்சியம் அளிக்க வந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது. எனவே பின்னிட்டு (ஏற்கனவே 3 வது எதிரிமனுதாரர் தோன்றாத்தரப்பினராக அறிவிக்கப்பட்டிருப்பதால் தேவையான நடவடிக்கை எடுக்க தெரிவித்து தற்போது சாட்சியை விசாரிக்க அனுமதி வழங்கப்படுகிறது). மேலும் இந்த சாட்சியத்தின் சாட்சியம் அளிக்க வழங்கப்பட்ட அதிகாரம் வழங்கப்பட்ட கடிதத்தின் அதிகாரம் அளிக்கப்பட்ட நபர் அனுமதி கடிதம் வழங்கவில்லை என்று ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க வழங்கப்பட்ட அதிகார கடிதம் ம.த.சா.ஆ 11 என்று குறியீடு செய்யப்படுகிறது. ஆதார் அட்டையில் நகல் ம.த.சா.ஆ.12 என்று குறியீடு செய்யப்படுகிறது. கம்பனி கொடுத்த சான்றிதழ் ம.த.சா.ஆ.13 ஆகும். (with objection).

**மதிய இடைவேளைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது. நேரம். 1.39 மணி.**

**முதல் விசாரணையின் தொடர்ச்சி**
**நேரம். மதியம் 2.44 மணி**

சிவக்குமார் என்பவர் சக்திபெரோ அலாய்ஸ் இந்தியா பிரைவேட் லிமிட், என்ற கம்பெனியில் ஓட்டுநராக பணிபுரிகிறார். அந்த கம்பெனியில் எனக்கு மாதத்திற்கு ரூ.45,000/- சம்பளம் அவர் வங்ககிக் கணக்கில் வழங்கப்பட்டது. அட்வான்ஸ் போக மீதி தொகையை வங்கியில் செலுத்துவோம். சாட்சியம் அளிப்பதற்கு எங்கள் கம்பனி சார்பில் எனக்கு கடிதம் வழங்கப்பட்டது.

## R2 சார்பில் குறுக்கு விசாரணை

நான் அந்த கம்பனியில் ஓடும் சுமார் 60 வண்டிகளுக்கு நான் தான் பொறுப்பு அலுவலர் ஆவேன். அதற்கான அடையாள அட்டை இல்லை. அவர் temporary ஆக வேலை செய்தார் 4 வருடம் ஆனால் தான் நிரந்தரம் ஆக்குவார்கள், அவர் குறைவாக தான் வேலை செய்திருக்கிறார். அவர் அங்குதான் வேலை செய்தார் என்தற்கு அந்த நபர் குறித்து விவரங்கள் (individual profile) தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. ஆனால் வங்கிகணக்கு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நிரந்தர பணியாளர்களுக்கு pay slip கொடுப்பார்கள். அவர் தற்காலிக ஊழியர் என்பதால் pay slip கொடுக்கவில்லை. அந்த கம்பெனில் சம்பளம் வாங்குவதற்கு நான் அதிகாரி இல்லை என்றால் சரிதான். ஆனால் வருகை பதிவேட்டை பார்த்து அக்கவுண்ட்ஸ் டிபார்ப்மெண்டுக்கு அனுப்பி வைப்பேன். அது ம.த.ஆ.11 ல் கையொப்பம் போட்டுள்ள நபரின் பெயரும், அவருடைய பதிவு விவரமும் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். G.T. Balaji அவர் டைரக்டர்களில் ஒருவர். அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ம.த.ஆ.13 லும் யார் கொடுத்தார்கள் என்றும், கையொப்பம் போட்டுள்ள நபரின் பெயரும், அவருடைய பதிவு விவரமும் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். இறந்தவருக்கு வருமான வரி கட்டியதற்கான வருமான வரி கணக்கு விவரங்கள் பராமரிப்பு செய்யவில்லை என்றால் சரிதான். அவர் தற்கால ஊழியர் என்பதால் வேறு எந்த (PF. ESI, Gratuity)சலுகைகள் என்றால் இல்லை. ஆதார் நகலில் முகம் தெளிவாக இல்லை என்றாலும், விலாசம் விவரம் இல்லை என்றாலும்

சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் printed format ல் உள்ளது என்றாலும், யாரோ தயார் செய்து கொடுத்துள்ளார்கள் என்றாலும், நான் சொன்னது போல் அவர் ரூ.45,000/- சம்பளம் வாங்கவில்லை என்றாலும் சரியல்ல. ம.த.சா.ஆ.13 ல் சொல்லப்பட்டுள்ள காலக்கட்டமான 14.03.2021 ல் இருந்து 07.02.2023 வரை வேலை செய்ததற்கான எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் ஏற்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. நான் கூறிய வருகை பதிவேடு எதுவும் தாக்கல் செய்யவிலலை என்றாலும் சரிதான். நான் சாட்சியம் அளிப்பதற்கு தகுதியான சாட்சிஇல்லை என்றாலும் எனது சாட்சியம் ஏற்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல.

**R4 சார்பில் குறுக்கு விசாரணை**

2 வது எதிர்மனுதாரர் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை 4 வது எதிர்மனுதாரர் தரப்பில் அவ்வாறே ஏற்றுக்கொள்ளப்படுகிறது. கூடுதலாக குறுக்கு விசாரணை இல்லை.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

(Sd/G.Santhi)
முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.